## அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே
## அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 25/26

**2013 பிறந்தவர்கள்** பின்வரும் 8 குறள்களை மட்டும் ஒப்பித்தல் செய்தல். குறள்களுக்கான பொருள் விளக்கம் கூறத்தேவையில்லை.

1. **பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
**நன்மை கடலிற் பெரிது.** (குறள் 103)

பயன் எதையும் எதிர்பாராமல் ஒருவர் செய்த உதவியின் தன்மையை ஆராய்ந்தால் அதன் நன்மை கடலைவிடப் பெரியதாகும்.

2. **அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.** (குறள் 45)

குடும்ப வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கு இடையிலும் அன்பும் அறம் செய்யும் குணமும் இருக்குமானால், அதுவே அவ்வாழ்க்கையின் பண்பும் பயனுமாகும்.

3. **பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்**
**அருமை உடைய செயல்.** (குறள் 975)

செயற்கரிய செயல்களை ஆற்ற வல்லவர்கள் பெருமைக்குரியவர்கள்.

4. **கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை.** (குறள் 400)

அழிவு இல்லாத நிலையான செல்வம் கல்வி. அதை விடச் சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை.

5. **இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ**
**வன்சொல் வழங்கு வது.** (குறள் 99)

இனிய சொற்களையே பேச வேண்டும். கடுமையான சொற்களைத் தவிர்க்க வேண்டும்.

6. **அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன் றில்லை**
**ஒழுக்கம் இலான்கண் உயர்வு.** (குறள் 135)

பொறாமை உடையவனிடம் செல்வம் சேர்வதில்லை. அதுபோல, ஒழுக்கம் இல்லாதவனிடத்து உயர்வு இல்லை.

7. **செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு.** (குறள் 86)

எமது வீட்டுக்கு வருவோரை அன்போடு வரவேற்க வேண்டும். அகத்தால் மிக மகிழ்ந்து அன்போடு உணவளிக்க வேண்டும்.

8. **சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்**
**பெற்றத்தால் பெற்ற பயன்.** (குறள் 524)

தன் சுற்றத்தால் தான் சூழப்படும்படி அவர்களைத் தழுவி வாழ்வதே ஒருவன் செல்வத்தைப் பெற்றதன் பயன் ஆகும்.

**வளாகங்களில் முதல் மூன்று நிலைகளையும் அடைந்த மாணவர்கள் அன்னைத் தமிழ்முற்றப் போட்டியில் பங்குபெறும் வாய்ப்பைப் பெறுவார்கள்.**

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை